ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2419/04 - 2025 ජනවාරි මස 15 වැනි බදාදා - 2025.01.15

*2419/04 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### எம்பிலிபிட்டி பிரதேச சபை

எம்பிலிபிட்டி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படும் பிரதேசத்தில் காணி வரைபடம், காணி கையேற்பு வரைபடம் மற்றும் கட்டிடங்கள் பரிசீலனை செய்தல் அனுமதியளித்தல் தொடர்பான துணை விதி

*1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் இலக்கம் 126 ஆவது பிரிவுடன் மொழியப்பட வேண்டிய குறித்த சட்டவாக்கின் 122ஆவது சரத்தின் மூலம் பிரதேச சபைகளுக்கு சாட்டப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் எம்பிலிபிட்டி பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்ட மற்றும் 2023.03.16 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட இங்கே கீழே காட்டப்படும் எம்பிலிபிட்டி பிரதேச சபை எல்லைக்குள் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் பகுதியில் காணி வரைபடம், காணி கையேற்றல் வரைபடம், மற்றும் கட்டிடங்கள் பரிசீலனை செய்தல் அனுமதித்தல் தொடர்பான துணை விதி, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உள்ளூராட்சி (துணை விதிகள்) சட்டத்தின் 2ஆம் சரத்துடன் மொழியப்படவேண்டிய மேற்குறிப்பிடப்பட்ட பிரதேசசபை சட்டவாக்கின் இலக்கம் 123(1) ஆவது சரத்தின் பிரகாரம் சப்பிரகமுக மாகாண சபை ஆளுநர் ஏ.ஏ.சீ.ஜே.இராஜரத்ன ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டது என்றும் இந்த அறிவித்தலானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து குறித்த துணைவிதியானது எம்பிலிபிட்டி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.*

**ஏ.ஏ.சீ.ஜே.இராஜரத்ன,**
ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

*2024/ 12/ 30 ம் திகதி,*
*சப்பிரகமுவ மாகாண சபை.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**எம்பிலிபிட்டி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படும் பிரதேசத்தில் காணி வரைபடம், காணி துண்டாக்கல் வரைபடம் மற்றும் கட்டிடங்கள் வரைபடம் என்பன பரிசீலனை செய்தல் அனுமதியளித்தல் தொடர்பான துணை விதி**

1. எம்பிலிப்பிட்டி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம் விதிமுறைகள் நடைமுறைப் படுத்தப்படும் பிரதேசத்தில் காணி வரைபடம், காணி துண்டாக்கல் வரைபடம் மற்றும் கட்டிடங்கள் வரைபடம் அனுமதியளித்தல் அதன் மூலம் அதிகார பிரதேசத்தினுள் மக்கள் சுகாதாரம் தொடர்பான விடயங்கள் முறைமைப் படுத்தலோடு அதற்கு உகந்த நடவடிக்கைகள் எடுத்தல் தொடர்பாக இந்த துணை விதி விதிக்கப்படுகின்றது

2. இந்த துணை விதியானது எம்பிலிபிட்டி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படும் பிரதேசத்தில் காணி வரைபடம், காணி துண்டாக்கல் வரைபடம் மற்றும் கட்டிடங்கள் வரைபடம் பரிசிலனை செய்தல் அனுமதியளித்தல் தொடர்பான துணை விதி என அழைக்கப்படும்

3. இந்த துணை விதியை அமைப்பதற்கு 1987 ஆம் ஆண்டின் இலக்கம் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டவாக்கின் 126 (vi), (vii), (ix) உப சரத்தின்கீழ் எம்பிலிபிட்டி பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

4. (1) 1915 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 5 ஆவது சரத்தின் கீழ் அனுமதி பெற்றுக்கொள்வதற்காக தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்படும் கட்டிட நிர்மானத்திற்கான திட்டம் அல்லது மீள் நிர்மானத்திற்கான திட்டமொன்று இந்த துணைச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்படும் தேவைகள் பூர்த்தியாகும் விதத்தில் அது தொடர்பான விண்ணப்பப் படிவமொன்றின் மூலம் தவிசாளரின் அனுமதிக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) இந்த சரத்தின் கீழான விண்ணப்பமொன்று சபையிடம் பெற்றுக்கொள்ளும்போது அதற்காக அறவிடப்படும் கட்டணம் சபையினால் காலத்திற்குக் காலம் பிரேரணை ஒன்றின் மூலம் நிறைவேற்றப்பட்டு அறிவிக்கப்படவேண்டும்.

5. 1915 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 5 ஆவது சரத்தின் கீழ் அனுமதி பெற்றுக்கொள்வதற்காக மேலே 4 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் தொடர்பான காணியானது இந்த துணை விதியில் கீழ் விபரிக்கப்படும் விதத்தில் தவிசாளாரால் அங்கீகரிக்கப்பட்ட காணி வரைபடம் மூலம் அல்லது காணி மீள் துண்டாக்கள் வரைபடம் மூலம் சுட்டிக்காட்டப்படும் காணியாக இருக்க வேண்டும்.

6. (1) மேலே 5 ஆவது சரத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படும் காணி வரைபடம் மூலம் அல்லது காணி மீள் துண்டாக்கல் வரைபடம் தொடர்பான சகல விண்ணப்பங்களும் இந்து துணை விதியின் முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு விண்ணப்பப் படிவம் மூலம் அதற்கான தேவைகள் பூர்த்தியான முறையில் விண்ணப்பிக்க வேண்டும்.

(2) இந்த சரத்தின் கீழான விண்ணப்பம் ஒன்றை சபையிடம் பெற்றுக் கொள்ளும்போது அதற்காக அறவிடப் படவேண்டிய தொகை சபையினால் காலத்திற்குக் காலம் பிரேரணை மூலம் தீர்மானிக்கப்பட்டு அறவிக்கப்படவேண்டும்.

7. கட்டிட நிர்மாணத்திற்கான காணி ஒன்று உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஒருவரினால் அபிவிருத்தித் திட்டத்திற்கு ஏற்றவாறு வரையப்பட்டிருக்க வேண்டியதுடன் அது வதிவிட தேவைக்காயின் அதற்கான காணியானது 6 பர்ச்சுகளுக்குக் குறையாத நிலமாகவும் வர்த்தக நோக்குடனானது எனில் பர்ச்சுகளுக்குக் குறையாத நிலமாக இருக்கவேண்டும்.

எனினும் ஏதாவது ஒரு காணி அபிவிருத்தி நடவடிக்கைக்காக மீள துண்டாக்கல் செய்யும்போது அவ்வாறு துண்டாடப்படும் காணி துண்டில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த காணியின் அளவானது வதிவிட தேவைக்காயின் அதற்கான காணியானது 10 பர்ச்சுகளுக்கு குறையாத நிலமாகவும் வர்த்தக நோக்குடனானது எனில் 6 பர்ச்சுக்குக் குறையாத நிலமாக இருக்க வேண்டும்.

8. அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும் வரைபடம் காணி மீள்துண்டாக்கல் வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளை கருத்திற்கொண்டு அமைக்கப்படவேண்டும்.

(1) ஏதும் கட்டங்கள் இருப்பின் அதன் அமைவை அளவுகளுடன் அறிவிக்கப்பட வேண்டும்.

(2) உப துண்டாடலுக்கான சகல காணியும் 1:1000 என்ற அளவையிலும் உப துண்டாடல் அல்லாத சந்தர்ப்பத்தில் 1:1000 அல்லது 1:2000 என்ற அளவுத்திட்டத்தில் வரையப்பட்டிருக்க வேண்டும்.

(3) வரைபின் அளவுத்திட்டம் , வடக்குதிசை, பக்கத்தில் அமைந்துள்ள காணித் துண்டின் கட்டிடத்தின் வரிமதிப்பீட் டிலக்கம் இருப்பின் அந்த இலக்கத்தை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

(4) காணிக்கு பிரவேசிக்கும் பாதையையும் அதன் அகலத்தையும் குறிப்பிடப்பட வேண்டும்.

(5) தற்போது காணப்படும் அல்லது திட்டமிடப்பட்டுள்ள சாக்கடை அல்லது நீரோட்டத்தை நீர் வடிந்து செல்லும் திசையுடன் குறிப்பிட வேண்டும்.

(6) இயற்கையான நீர் அல்லது மழைநீர் முறையாக வடிந்தோடும் விதத்தை காட்டும் சாக்கடை தொகுதி மற்றும் குறித்த சாக்கடை தொகுதியானது யாதுமொரு பொதுவான சாக்கடை தொகுதியுடன் அல்லது வேறு நீரோட்டத்துடன் தொடர்பு படும் விதம் வரைபடத்தில் காட்டப்பட வேண்டும். தற்போது காணப்படும் சாக்கடை உயரம் போதுமானதாக இல்லாது விடின் பிரதியீட்டு சாக்கடை அமைவு வரைபடத்தில் காட்டப்படவேண்டும்.

(7) காணியின் சரிவு 10 பாகையை விட அதகரிக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் உயரம் அமைவுக்கோடு மற்றும் வீதியின் அளவு வரைபடத்தில் காட்டப்பட வேண்டும்.

(8) சமர்ப்பிக்கப்படும் வரைபடத்தில் எல்லைகள் கறுப்பு நிறத்தில் குறிப்பிடப்படவேண்டும்.

(9) சகல வீதி ரேகை, கட்டிட ரேகை மற்றும் வேறு வகை பாதை ஒதுக்கீடு அல்லது வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டத்தில் அல்லது சட்டரீதியான அதிகாரம் கொண்டவர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடு அல்லது எல்லை இருக்குமாயின் அது வரைபடத்தில் காட்டப்பட வேண்டும்.

(10) காணப்படும் நீர் வழி, குழிகள், வேலி அல்லது எல்லைகள் தாங்குசுவர்கள் மின்சார மற்றும் தொலைபேசி கம்பி வழி வரைபடத்தில காட்டப்படவேண்டும்.

(11) ஒரு ஹெக்டயார் அல்லது அதற்கு கூடுதலான காணி ஒன்று துண்டாக்கப்படும்போது அதன் ஒரு காணித்துண்டின் பரப்பளவு 40 பர்ச்சுக்கு குறைவானதாகவும் மற்றும் 10 காணித்துண்டுகளுக்கும் மேலாக துண்டாக்கப்படும்போது காணியின் உட்கட்ட பாதைக்கான நிலம் தவிர்த்து மீதி நிலப்பரப்பில் 10% நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டு அதை பொதுத் தேவைக்கான பகுதியாக காட்டப்பட வேண்டும்.

(12) துண்டாக்கல் வரைபடம் எனில் அதன் உட்கட்ட பாதைகள் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் விதிகளுக்கேற்ப அமைய வேண்டும்.

(13) வரைபட அங்கீகாரத்தின்போது குறிப்பிட்ட விபரங்களை பதிவிடுவதற்காக வரைபடத்தில் ஆரம்ப பக்கத்தில் 7.5 × 5.5 அளவு இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

(14) வரைபடத்திற்குட்பட்ட நிலத்தில் அல்லது அருகில் மின்சார கம்பிகள் இணைப்புக்கான மின்சார தூண் அமைந்திருப்பின் அதுதொடர்பாக அமைவு வரைபடத்தில் குறிப்பிடப்படவேண்டும்.

9. இந்த துணைவிதியின் கீழ் காணி உரிமையாளர் அல்லது அபிவிருத்தியாளர் பெற்றுக்கொள்ள வேண்டிய இணக்கச்சான்றிதழ் தவிசாளர் பிறப்பிப்பதற்கு முன்னர் மீள துண்டாக்கல் வரைபடத்திற்கான பொதுத் தேவைக்காக ஒதுக்கப்பட்ட நிலம் காணி உரிமையாளரினால் பிரதேச சபைக்கு பரிசு உறுதி மூலம் வழங்க வேண்டும்.

10. (1) இந்தத் துணையின் 6ஆவது சரத்தின் கீழ் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும் சகல விண்ணப்பம் தொடர்பாக இந்த துணை விதியின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள திட்டமிடல் கமிட்டியில் பரிந்துரை அடிப்படையில் தவிசாளரினால் அனுமதி வழங்கப்படவேண்டும்.

(2) இந்த சரத்தின் கீழ் தவிசாளரின் முடிவு தொடர்பாக அதிருப்தியடைந்த யாதுமொருவர் அது தொடர்பாக ஏதுமொரு முறையீடொன்றை குறித்த முடிவு அறிவிக்கப்பட்டு மூன்று மாதத்திற்குள் உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்க முடியும் என்பதோடு இதுதொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் முடிவு இறுதி முடிவாகும்.

(3) இந்த சரத்தின் கீழான மேன்முறையீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரினால் காலத்திற்கு காலம் அதற்கான நியதிகள் செய்வதானது சட்டரீதியானதாகும்.

11. இந்த துணைவிதியின் 6 ஆவது சரத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் தொடர்பாக குறித்த துணை விதியின் விதிமுறைகளுக்கேற்ப அனுமதி வழங்க முடியாத சந்தர்ப்பத்தில் அனுமதி பெற்றுத்தர முடியாத காரணத்துடன் தவிசாளர் விண்ணப்பம் கிடைத்து 30 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பதாரருக்கு அறிவிக்க வேண்டும்.

12. இந்த துணை விதியின் கீழ் காணி ஒரு பகுதிக்கான வரைபடம் காணி மீள் துண்டாக்கலுக்கான வரைபடம் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும்போது குறித்த காணியின் உரிமையாளர் அல்லது காணி உரிமையாளரின் இணக்கத்துடன் காணி அபிவிருத்தியாளரால் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

13. இந்த துணைவிதியின் கீழ் அனுமதியளிக்கப்படும் காணி ஒரு பகுதிக்கான அல்லது மீள் துண்டாக்கலுக்கான வரைபடம் உள்ளிட்ட சகல காணித்துண்டுகள் அல்லது ஒன்று அல்லது பல காணித்துண்டு விண்ணப்பதாரரின் உரிமையிலிருந்து அகலாது இருக்கும் வரை எந்தவிதமான பொதுமக்கள் இடைஞ்சலும் ஏற்படாதவாறு நடாத்திச் செல்லுதல் விண்ணப்பதாரரின் கடமையாகும்.

14. இந்த துணைவிதியின் 10ஆவது சரத்தின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட மீள் துண்டாக்கல் வரைபடத்திற்கமைய யாதுமொரு காணித்துண்டு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட உரிமையிலிருந்து தவிர்ந்திடவோ அல்லது அது போன்ற தவிர்தலுக்கு யாதுமொரு ஊக்கம் காணி உரிமையாளர் உண்டாக்குவதற்கு ஏற்கனவே குறிந்த காணி அல்லது காணித்துண்டு அனுமதி வழங்கும் போது விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப செய்யப்பட்டுள்ளது என்பதை தவிசாளர் இடம் பெற்றுக்கொண்ட இணக்கச்சான்றிதழ் மூலம் உறுதி செய்யப்படவேண்டும்.

15. இந்த துணைவிதியின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட யாதுமொரு காணித்துண்டு தொடர்பான வரைபடம் அல்லது மீள் துண்டாக்கல் வரைபடத்திற்கான யாதுமொரு காணி 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டவாக்கின் 154 ஆவது சரத்தின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள வரி முறைகளுக்கு கீழ் விற்பனை செய்யப்படும் போது விற்பனைக்கான சரியான பெறுமதி தொடர்பாக காணி உரிமையாளர் அல்லது அபிவிருத்தியாளர் பிரதேச சபை செயலாளருக்கு அறியப்படுத்த வேண்டும்.

16. 10 ஆவது சரத்தின் கீழ் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்பத்திர நடவடிக்கைகளுக்காக அறவிடப்படும் கட்டணம் இந்த துணை விதியின் இரண்டானது அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும்.

17. இந்த துணைவிதி நடைமுறையில் வந்த பின்னர் சபை அதிகாரப் பிரதேசத்தினுள் தவிசாளரினால் அமைதியளிக்கப்பட்ட உப துண்டாக்கல் வரைபடம் இன்றி யாதுமொரு காணியில் ஏதாவது அபிவிருத்தி நடவடிக்கை மேற்கொண்டிருப்பின் குறித்த வரைபடம் அனுமதிக்காக சரி செய்யும் பொருட்டு சமர்ப்பிக்கப்படும் சகல விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்குறிப்பிடப்பட்ட சரத்தின் கீழ் தீர்மானிக்கப்படும் கட்டணங்களுக்கு தவிர்ந்து மேலதிக கட்டணமொன்று இந்த துணைவிதியின் இரண்டாவது சரத்தின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளவாறான பிரிவின் கீழான மேல் மட்டத்திற்கு உட்பட்ட வகையில் சபையினால் காலத்திற்குக்காலம் பிரேரித்து தீர்மானித்து அறவிடுதல் சட்ட ரீதியானதாகும்.

18. இந்த துணை விதியின் கீழ் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் காணி வரைபடம் அல்லது துண்டாக்கலுக்கான வரைபடம் தொடர்பாக அனுமதி வழங்கப்படும் முன்னர் இந்த துணைவிதியின் மூன்றாவது அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறான சட்டரீதியான அதிகாரம் பெற்றவர்கள் மூலம் அல்லது அது போன்றதென கருதப்படும் வேறு யாதுமொரு அதிகாரம் பெற்றவர்கள் மூலம் தீர்வுச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று திட்டமிடல் கமிட்டியினால் பரிந்துரைக்கப்படும் போது உத்தேச அனுமதிக்காக குறித்த தீர்வுச்சான்றிதழை பெற்றுத்தருமாறு தவிசாளர் விண்ணப்பதாரியிடம் வேண்டிக்கொள்வது சட்டரீதியானதாகும்.

19. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 5ஆவது சரத்தின் கீழ் அனுமதி பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு அல்லது மீள் நிர்மாணத்திற்கான வரைபடம் இந்த துணை விதியின் நான்காவது அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

20. மேலே 19 ஆவது சரத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்திற்கான நிர்மாணமானது இந்த துணைவிதியின் 5 ஆவது சரத்தின் கீழ் தவிசாளரினால் அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்ட காணிக்கு தொடர்பான நிர்மாணமாக இருக்கவேண்டும்.

21. மேலே 19 ஆவது சரத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தின் நடவடிக்கைக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணமானது இந்த துணை விதியின் இரண்டாவது அட்டவணையின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளவாறான கட்டணமாக இருக்கவேண்டும்

22. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 6 ஆவது சரத்தின்கீழ் தவிசாளரின் எழுத்துமூல அனுமதிக்காக

சமர்ப்பிக்கப்படும் சகல விண்ணப்பங்களும் இந்த துணைவிதியின் நான்காவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறான விண்ணப்பப்படிவம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

23. 22 ஆவது சரத்தின்கீழ் விண்ணப்பிக்கும் போது திருத்தியமைக்கப்படும் நிர்மாணமானது அது தொடர்பான அனுமதிக்கப்பட்ட வரைபடத்தில் சிவப்பு நிறத்தில் காட்டப்படவேண்டும்.

24. இந்த துணைவிதியில் விபரிக்கப்படும் திட்டமிடல் கமிட்டியின் பரிந்துரையை அடிப்படையாகக்கொண்டு மேலே 19 ஆவது சரத்தின் கீழான விண்ணப்பப்படிவத்திற்க்கான வரைபடத்திற்காக மற்றும் 22ஆவது சரத்தின்படி எழுத்துமூல அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்துடன் தொடர்பாக தவிசாளரினால் அல்லது வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தில் அதற்காக அதிகாரம் வழங்கப்படும் வேறு யாதுமொரு அதிகாரம் கொண்டவர்கள் மூலம் நிலைமைக்கு ஏற்றவாறு வரைபடம் அனுமதியளித்தல் அல்லது எழுத்துமூல அனுமதி பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

25. மேலே 19 ஆவது சரத்தின்கீழ் மற்றும் 22 ஆவது சரத்தின்கீழ் சமர்ப்பிக்கப்படும் வரைபடங்களுக்காக குறித்த விண்ணப்பம் கிடைத்து 30 தின கால எல்லைக்குள் அனுமதி பெற்றுக்கொடுத்தல் அல்லது அனுமதி பெற்றுக்கொடுக்க முடியாதுவிடின் அதற்கான காரணத்தை விண்ணப்பதாரருக்கு அறியக்கொடுப்பது தவிசாளரின் அல்லது அனுமதிபெற்றுக்கொடுக்கும் அதிகாரம் கொண்டவர்களின் கடமையாகும்.

26. துணை விதியின்கீழ் கட்டிட நிர்மாணத்திற்கு அல்லது மீள் நிர்மாணத்திற்கான வரைபடம் அல்லது திருத்த வேலைக்கான அனுமதிக்கான வரைபடத்திற்கான அனுமதி பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கும் போது அது குறிந்த காணியின் உரிமையாளர் அல்லது காணியின் உரிமையாளரின் விருப்பத்துடனான போது காணி அபிவிருத்தியாளரினால் விண்ணப்பிக்க முடியும்.

27. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 5 ஆவது சரத்தின்கீழ் அனுமதியின்றி நிர்மாணிக்கப்படும் கட்டிடம் அல்லது குறித்த கட்டளைச் சட்டத்தின் 6 ஆவது சரத்தின் கீழ் அனுமதியின்றி நிர்மாணிக்கப்படும் கட்டிடம் தொடர்பாக இந்த துணைவிதியின் 19 ஆவது சரத்தின் கீழ் மற்றும் 22 ஆவது சரத்தின் கீழ் அனுமதிபெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் போது அது தொடர்பான வரைபடம் அனுமதிக்கும் போது மற்றும் அனுமதி பெற்றுக்கொடுக்கும் போது இந்த துணைவிதியின் இரண்டாவது அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு விதிக்கப்பட்டுள்ள கட்டணத்திற்கு புறம்பாக சரி செய்வதற்கான கட்டணம் அறவிடுவது சட்ட ரீதியானதாகும் என்றாலும் இந்த துணை விதி நடைமுறைப்படுத்தப்படும் தினத்திலிருந்து இரண்டு வருடகாலத்திற்கு அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்துடனாலன்றி செய்யப்படும் நிர்மாணம் அல்லது திருத்தியமைத்தல் தொடர்பாக வரைபடம் அனுமதியளிக்கும் போது அல்லது அனுமதி பெற்றுக்கொடுக்கும் போது இந்த சரத்தின் கீழ் அறவிடப்படும் உரிய முறையிலான அறவிடப்படும் கட்டணமாக இருக்கக்கூடாது.

28. இந்த துணைவிதியின் 19 ஆவது சரத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படும் வரைபடம் ஒன்றிற்காக மற்றும் 23 ஆவது சரத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவம் தொடர்பாக அனுமதி பெற்றுக் கொடுக்கும்போது அது தொடர்பான வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் விதி முறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். அந்த கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகள் நசுக்கப்படும் யாதுமொரு காரியம் தொடர்பாக சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்களையும் அபிவிருத்தி ஒழுங்குவிதிகளை தவிசாளர் கடைப்பிடிக்கலாம்

29. இந்த துணை விதியில் 19ஆவது சரத்தின் கீழும் மற்றும் 22 ஆவது சரத்தின் கீழும் அமைந்த விண்ணப்பப்படிவத்துடன் தொடர்பான தவிசாளரின் முடிவு தொடர்பாக திருப்தி அடையாத ஒருவர் மேல் முறையீடு தொடர்பாக வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகள் உட்படும்.

30. (1) இந்த துணைவிதியின் கீழுள்ள நடவடிக்கைகள் திட்டமிடல் கமிட்டி பின்வரும் விதத்தில் அமைந்திருக்கவேண்டும்

(அ) பிரதேச சபை தவிசாளர்

(ஆ) பிரதேச சபை செயலாளர்

(இ) தொழில்நுட்ப அதிகாரி, திட்டமிடல் அதிகாரி

(ஈ) சுகாதார வைத்திய அதிகாரி அல்லது அவரின் பிரதிநிதி

(ஊ) விடயதான அதிகாரி

(1) இந்த துணைவிதியின் கீழ் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்திற்கு அனுமதி பெற்றுக் கொடுக்கும் போது வேறு யாதுமொரு அதிகார சபையின் செயல் முறைகளை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தவிசாளர் முடிவெடுப்பாராயின் அந்த அதிகார சபையின் பிரதிநிதி ஒருவரை திட்டமிடல் கமிட்டியின் தலைவராக்குவது மேற்குறிப்பிட்ட முதலாம் உப சரத்தின் நடவடிக்கைகளுக்கு தடையாக அமையக்கூடாது.

31. இந்த துணைவிதியின் மேற்குறிப்பிட்ட சரத்தில் யாது குறிப்பிட்டிருப்பினும் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட காணி வரைபடம், காணி உப துண்டாடல் வரைபடம், கட்டிட நிர்மாணம், மீள் நிர்மாணத்துக்கான வரைபடம் அனுமதிபெற்றுக்கொள்வதற்காக திட்டமிடல் கமிட்டியில் ஆய்வுக்கு முன்னர் குறித்த காணி, கட்டிடம் தேசிய கட்டிட ஆய்வு அமைவினால் தமது அதிகாரத்தின்கீழ் அனுமதிபெற்றுக்கொள்ளல் கட்டாயமான பகுதியில் அமைந்திருப்பின் அந்த அதிகாரசபைக்கு முறையாக சாட்டப்பட்டு அது தொடர்பான பரிந்துரை அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு தவிசாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

32. இந்த துணைவிதியின் 30 ஆவது சரத்தின் பிரகாரம் திட்டமிடல் கமிட்டியில் அங்கத்துவம் வகிக்கும் அங்கத்தவர்களுக்காக உள்ளூராட்சி ஆணையாளரினால் விதிக்கப்படும் அளவுக்குட்பட்டதாக கொடுப்பனவொன்று செலுத்துவது சட்ட ரீதியானதாகும். எனினும், இந்த சரத்தின் கீழ் திட்டமிடல் கமிட்டி அங்கத்தவர்களுக்காக செலுத்தப்படும் பங்குபற்றும் கொடுப்பனவானது அன்றைக்கு கருத்தில் கொள்ளப்படும் இந்த துணைவிதியின் நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களுக்கு அறவிடப்படும் கட்டணத்தின் எழுபத்தைந்து வீதத்திற்கு உட்பட்டிருத்தல்வேண்டும்.

33. இந்த துணைவிதியின் கீழான நடவடிக்கைகளுக்காக அறவிடப்பட்ட கட்டணம் பிரதேச சபையினால் பிரதேச சபை பொது நிதியில் புறம்பான கணக்கொன்றில் நடாத்திச்செல்ல வேண்டும்.

34. இந்த துணைவிதியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமொன்றுடன் தொடர்பான காணி வரைபடம், காணி மீள் துண்டாடல் வரைபடம் அனுமதியளித்தல், கட்டிட நிர்மாணம் அல்லது மீள் நிர்மாணத்துக்கான வரைபடம் அனுமதி பெற்றுக்கொடுத்தல், திருத்தலுக்கான அனுமதி பெற்றுக்கொடுத்தல் போன்ற எந்த நடவடிக்கையாக இருப்பினும் அது தொடர்பான காணியின் உரித்து தொடர்பாக உந்துதல் ஏற்படாததாக இருக்கவேண்டும்

35. இந்த துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் காணி வரைபடம் காணி உப துண்டாடல் வரைபடம் அனுமதி பெற்றுக்கொள்ளாது யாதுமொரு காணியை அபிவிருத்தி செய்தல் குற்றமாகும். அத்துடன் இந்த குற்றம் தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டவாக்கின் 122ஆவது சரத்தின் கீழான தண்டனைக்கு உள்ளாக வேண்டும்.

36. வசனம் தொடர்பாக அர்த்தம் தேவைப்படின்.

'சபை' என்பது எம்பிலிபிட்டி பிரதேச சபையையும்,

'தவிசாளர்' என்பது எம்பிலிபிட்டி பிரதேச சபைக்காக 262 ஆம் அதிகாரத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டவாக்கின் மூலம் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட தவிசாளராகும்.

'உள்ளூராட்சி ஆணையாளர்' என்பது சப்பிரகமுவ மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரையும்,

'செயலாளர்' என்பது எம்பிலிபிட்டி பிரதேச சபையின் செயலாளர் பதவிக்கு நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ நியமிக்கப்பட்ட நபரையும்,

'சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ' என்பது எம்பிலிபிட்டி பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்கு சொந்தமான சுகாதார வைத்திய உத்தியோகத்தராகும்.

'அபிவிருத்தி நடவடிக்கை ' என்பது யாதுமொரு காணி துண்டாக்கல் அல்லது மீள துண்டாக்கி பிரித்தல் அல்லது காணியில் கட்டிடமமைத்தல் அல்லது மீள் கட்டிடமமைத்தல் அல்லது நிலத்தின் கீழ் அல்லது மேலால் நிரந்தரமாக ஏதாவது திருத்தும் பணி செய்வதாகும்.

'கட்டிடம் நிர்மாணம்' என்பது கட்டிடம் அல்லது எல்லை மதில் அல்லது வாயிற் கதவு புதிதாக நிர்மாணித்தல் ஒரு பகுதியை புதிதாக நிர்மாணித்தல் மற்றும் திருத்தம் செய்வதாகும்.

இந்த துணைவிதியின் சிங்கள,ஆங்கில, தமிழ் பிரிவுகளில் ஏதும் சந்தேகம் ஏற்படுமாயின் சிங்களப் பிரிவு முக்கியமாகும்.

**முதலாவது அட்டவணை**

......................................... பிரதேச பை

காணி வரைபடம் /காணி மீள்துண்டாக்கல் வரைபடம் அனுமதி பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்

தொடர் இலக்கம்:- ............................................

1. விண்ணப்பதாரரின் விபரம்.-

1.1 விண்ணப்பதாரரின் பெயர்:- ..........................................................................................................................................

1.2 மின்னஞ்சல் முகவரி:- ..................................................................................................................................................

1.3 தே.அ.அ இலக்கம்:- .......................................................................................................................................................

1.4 தொலைபேசி இலக்கம்:- ............................................................ கைபேசி இலக்கம்:- ...............................................................

1.5 முகவரி:- ......................................................................................................................................................................

1.6 வேறு விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவர்களது விபரம்

| பெயர் | மின்னஞ்சல் முகவரி | தே.அ.இல. | தொலைபேசி இலக்கம் | கைபேசி இலக்கம் | முகவரி |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

விண்ணப்பதாரர் கம்பெனி அல்லது வர்த்தக நிறுவனமாயின் அதன் பதிவு இலக்கம் :- ........................................ (அது தொடர்பான பதிவுச்சான்றிதழ் இணைக்கப்படவேண்டும்)

02. உத்தேச அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பான சுருக்கமான விபரம்

2.1 வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணியில் செய்யப்படும் உத்தேச அபிவிருத்தி

| | | |
|---|---|---|
| 1. மீள் துண்டாக்கல் | 2. இணைத்தல் | 3. குடியிருப்பு வீடு |
| 4. வர்த்தக நோக்கு கட்டிடம் | 5. தொழிற்சாலைக்கான கட்டிடம் | 6. வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் |

* மேற்குறித்த 6 இன் கீழ் அமையும் வேறு அபிவிருத்தி நடவடிக்கையாயின் அதன் விபரம்
..............................................................................................................................

2.2 உத்தேச அபிவிருத்தி சுற்றுச்சூழல் தொடர்பான ஏற்கனவே அனுமதியளிக்கப்பட்ட வரைபடம் இருப்பின் அதன் இலக்கம் ...............................(அனுமதிபெற்ற வரைபட பிரதி இணைக்கவும்

2.3 உத்தேச அபிவிருத்தி வரைபடத்திற்கான காணிதொடர்பாக

2.3.1. முகவரி:- ................................................................................................................................................

2.3.2. வரிபண இலக்கம் இருக்குமாயின:- ..................................................................................................................

(அனமித்த ஆண்டின் வரிப்பணம் சோலைவரி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை சமரப்பிக்கவும்

2.3.3. அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவு:- ...............................................................................................................

2.3.4. காணியின் உரித்து

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | குத்தகை | அன்பளிப்பு | வேறு |

(வேறு என்றால் உரித்தான விதத்தை குறிப்பிடவும்)

2.4 உரிமை பெற்றுக்கொண்ட உறுதியின்/பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்.

03.விண்ணப்பதாரர் அனுமதி பெற்றுக் கொள்வதற்கு உத்தேசித்துள்ள வரைபடத்திற்கான காணியின் உரிமையாளரா இல்லையா என்ற விபரம்.................

3.1 விண்ணப்பதாரர் காணியின் உரிமையாளர் அல்லாதுவிடின் உரிமையாளர் விபரம்

3.1.1. காணி உரிமையாளரின் முழுப்பெயர்:- ........................................................................................................
3.1.2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ................................................ ( பிரதியை இணைக்கவும்).
3.1.3. தொலைபேசி இலக்கம் நிலையான:-................................ கைபேசி:- ...........................................
3.1.4. நிரந்தர முகவரி :-..............................................................................................................................
3.1.5. மின் அஞ்சல் முகவரி :-.......................................................................................................................
3.1.6. பெக்ஸ் இலக்கம் :- .....................................................

3.2 இதன் பகுதியாக உரிமையாளரின் அறிக்கை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

04. அனுமதி பெற்றுக்கொள்வதற்கு உத்தேச வரைபடத்திற்கான காணிக்கு இலகுவாக உட்பிரவேசிக்கக்கூடிய பாதையை மேலோட்டமான வரைபடம் மூலம் சுட்டிக்காட்டி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

05. அனுமதிபெற்றுக் கொள்வதற்கு உத்தேச வரைபடத்திற்கான காணி தொடர்பான விபரம்

5.1 காணியின் தற்போதைய பாவனை-

| | | | |
|---|---|---|---|
| வெற்று/தரிசு நிலம் | குடியிருப்பு தொடர் இல்லம் | குடியிருப்பு தனி இல்லம் | வர்த்தக நோக்கில் |
| அலுவலக தன்மையில் | சிற்றுண்டி ஹோட்டல் போன்ற | தொழிற்சாலை/தொழிலகம் களஞ்சிய சாலை | வேறு |

வேறு என்றால் அதன் தன்மையைக் குறிப்பிடவும்:.................................................................
5.2 காணியின் ஏதாவது கட்டிடங்கள் உண்டா? ஆம்/இல்லை
காணப்படும் சகல கட்டிடங்கள், எல்லை, மதில், வேலி, வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதா ? ஆம்/இல்லை
5.4 வரைபடத்தைத் தயாரித்த நிலஅளவையாளரின் பெயர்:-.......................................................................................
5.5 அனுமதிக்காக சமர்ப்பித்துள்ள நில அளவை படத்தின் இலக்கம்:-............................................
5.6 காணி அளவை செய்த திகதி:-.......................................................
5.7 வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணியின் பரப்பளவு:-.......................................................
5.8 அனுமதிக்கு உத்தேசித்துள்ள வரைபடம் இரண்டு பிரதிகள் சமர்ப்பிக்க வேண்டும்.

06. குறித்த காணிக்கு வசதிகள் வழங்கப்படும் விதம்

6.1 வரைபடத்திற்கான காணிக்கு குடிநீர் வசதிக்கான உத்தேச நடவடிக்கைகள்
.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................

6.2 உக்காத கழிவுப் பொருட்களை அகற்றும் நடவடிக்கைகள்

........................................................................................................................................................................................................
........................................................................................................................................................................................................
........................................................................................................................................................................................................

6.3 தேசிய மின்சார தொகுதியிலிருந்து மின்சாரம் பெற்றுக்கொள்ள முடியுமா? விபரம்

........................................................................................................................................................................................................
........................................................................................................................................................................................................
........................................................................................................................................................................................................

07 விண்ணப்பப் பத்திரம் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அனுமதிக்கான உத்தேச வரைபடம் தொடர்பாக தீர்வுச்சான்றிதழ் பெற்றிருப்பின் அது தொடர்பான விபரம்.-

| சான்றிதழின் பெயர் | வழக்கின் நிறுவனம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

சகல சான்றிதழ்களிதும் பிரதி இணைக்கப்பட வேண்டும்.

08. விண்ணப்பப்படிவத்திற்கான கட்டணம்

8.1 கட்டணம் செலுத்திய திகதி.-..................................................
8.2 தொகை ( ரூபா).-....................................................................
8.3 செலுத்திய விதம் .- பணம்/காசோலை
( பற்றுச்சீட்டு சமர்ப்பிக்க வேண்டும்)

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்று உறுதி செய்கின்றேன்.

.............................. ........................................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**காணி உரிமையாளர் அறிக்கை**

விண்ணப்பதாரர் காணி உரிமையாளர் அல்லாதுவிடின் இந்த அறிக்கையை காணி உரிமையாளரினால் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

01. விண்ணப்பதாரரின் மற்றும் உத்தேச அபிவிருத்தியின் விபரம்.-

1.1 விண்ணப்பதாரரின் பெயர்.- ..........................................................................................................................
1.2 முகவரி.-..............................................................................................................................................
1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் .- .........................................................................................................
1.4 தொலைபேசி இலக்கம் :-கைபேசி:- ................................. நிலையான...........................................
1.5 உத்தேச அபிவிருத்தியின் தன்மை :-..............................................................................................................
1.6 அபிவிருத்திக்காக உத்தேசித்துள்ள காணி முகவரி :-................................................................................................
1.7 வரிப்பண இலக்கம் ( இருக்குமாயின்):- ......................................................

02. மேலே இலக்கம் 01 இன் கீழ் விபரிக்கப்படும் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசித்துள்ள .......................... உத்தரவுபெற்ற நில அளவையாளரினால் வரையப்பட்ட .................................... இலக்கமும் ................................ திகதியும் கொண்ட நில அளவையாளர் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணியின் உண்மையான உரிமையாளர்/ குத்தகைக்காரர் நான்/நாம் ஆவோம் என்பதையும் என-க்கு/நமக்கு உரித்தான குறித்த காணியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைக்காக மேலே இலக்கம் 01 இன் கீழ் விண்ணப்பதாரியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ........................................................................................ என்பவர்களுக்கு இத்தால் அதிகாரம் சாட்டப்படுவதோடு அதற்கேற்ப பிரதேச சபை மூலம் அதற்கான அனுமதி பெற்றுக்கொள்வது உட்பட இது சார்ந்த நடவடிக்கைகளுக்கு நான்/நாம் இற்காக நடவடிக்கை எடுப்பதற்கு ................................................................ என்பவருக்கு அதிகாரமுள்ளதாக கருதப்பட்டு செயலாற்றுமாறு இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

20.......... வருடம் .................மாதம்................. ஆந் திகதி.

| பெயர் | கையொப்பம் |
|---|---|
| 1. ................................ | ................................ |
| 2. ................................ | ................................ |
| 3. ................................ | ................................ |
| 4. ................................ | ................................ |
| 5. ................................ | ................................ |

**இரண்டாம் அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| காணி துண்டாடல் வரைபடம் தொடர்பாக அனுமதி கட்டணம் ஒரு காணித்துண்டிற்கு | | | |
| பேர்ச்சஸ் 6 முதல் 10 வரை | ரூபா 500.00 | | |
| பேர்ச்சஸ் 10 முதல் 20 வரை | ரூபா 1,000.00 | | |
| பேர்ச்சஸ் 20 இற்கு மேல் | ரூபா 1,500.00 | | |
| காணி வரைபடம் தொடர்பாக அனுமதி கட்டணம் ஒரு காணித்துண்டிற்கு | | | |
| பேர்ச்சஸ் 40 வரை | ரூபா 1,000.00 | | |
| பேர்ச்சஸ் 40 முதல் 80 வரை | ரூபா 1,500.00 | | |
| பேர்ச்சஸ் 81 இற்கு மேல் | ரூபா 2,000.00 | | |
| காணி வரைபடம் தொடர்பாக அனுமதி பெற்றுக்கொள்ளாமல் துண்டாடல் செய்திருக்கும் சந்தர்ப்பத்தில் சரி செய்வதற்காக குறித்த காணித்துண்டாடல் வரைபடம் தொடர்பாக அனுமதி பெற்றுக்கொள்வதற்கான உரிய கட்டணத்திற்கு புறம்பாக குறித்த கட்டணத்தின் | | | |
| பேர்ச்சஸ் 6 முதல் 10 வரை | 30% | | |
| பேர்ச்சஸ் 10 முதல் 20 வரை | 40% | | |
| பேர்ச்சஸ் 20 இற்கு மேல் | 50% | | |
| கட்டிட நிமாணம் /மீள் நிர்மாணம் மற்றும் திருத்தங்களுக்கு (ஒரு சதுர மீற்றருக்கு) | | | |
| நிலத்தின்பரப்பளவு சதுர மீற்றர் | குடியிருப்பு | | குடியிருப்பு அல்லாத |
| | ஒற்றை மாடிவீடு | மாடி வீடு | |
| 400 வரை | ரூபா 20.00 | ரூபா25.00 | ரூபா25.00 |
| 401- 1000 வரை | ரூபா 22.00 | ரூபா27.00 | ரூபா27.00 |
| 1001- 1500 வரை | ரூபா 25.00 | ரூபா30.00 | ரூபா30.00 |
| 1501- 2000 வரை | ரூபா 25.00 | ரூபா32.00 | ரூபா 32.00 |
| 2000 இற்கு மேல் ஒவ்வொரு 90 சதுர மீற்றருக்கும் | ரூபா 2000.00 | ரூபா2000.00 | ரூபா2000.00 |
| சரிசெய்த கட்டணம் - அத்திவாரம் வரை முடிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் | | | |
| அபிவிருத்தியின் தன்மை | குறித்த கட்டிட வரைபடம் தொடர்பாக அனுமதி பெற்றுக் கொள்வதற்கான உரிய கட்டணத்திற்கு புறம்பாக குறித்த கட்டணத்தின் | | |
| | குடியிருப்பு | குடியிருப்பு அல்லாத | |

| | | |
|---|---|---|
| அத்திவார மட்டம் வரை | 25% | 30% |
| கூரை மட்டம் வரை கட்டுமான வேலையும் வலை பலகை செய்து முடித்திருப்பின் ( கூரை தவிர்த்து) | 35% | 40% |
| கூரை மற்றும் சுவர் அமைத்தல் | 50% | 60% |
| மதில்/ஓரச்சுவர் என்பவற்றிற்கு ( ஒரு மீற்றருக்கு) | | |
| | உயரம் 2 மீற்றருக்கு குறைவாக | உயரம் 2 மீற்றருக்கு மேல் |
| 50 மீற்றருக்கு குறைவாக | ரூபா 25.00 | ரூபா 50.00 |
| 50 மீற்றருக்கு மேல் | ரூபா 35.00 | ரூபா 60.00 |
| வேறு நிர்மாண வேலைகள் | | |
| | நிர்மாண வேலைக்கு | சரி செய்தல் |
| தொலைத்தொடர்பு /என்ட்டனா தூண்/ஒலிபரப்பு கோபுரம் | ரூ.40,000.00 | ரூ. 75,000.00 |
| தகுதிச் சான்றிதழ் வழங்குதல் | | |
| கட்டிடம் ( வதிவிடம்) | ரூபா 2,000.00 | |
| கட்டிடம் ( வதிவிடமல்லாத) | ரூபா 3,000.00 | |
| காணித்துண்டாடல் | ரூபா 3,000.00 | |

**மூன்றாவது அட்டவணை**

| |
|---|
| 1. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் |
| 2. மத்திய சுற்றாடல் அதிகார சபை |
| 3. இலங்கை முதலீட்டு சபை |
| 4. பூகற்பவியல் மற்றும் சுரங்க அகழ்வு பணியகம் |
| 5. பாதுகாப்பு அமைச்சு |
| 6. தீயணைப்பு சேவைப் பிரிவு |
| 7. சிவில் விமானசேவை அதிகார சபை |
| 8. தொல்லியல் திணைக்களம் |
| 9. நீர்ப்பாசனத் திணைக்களம் |
| 10. தொலைத்தொடர்பு ஆணைக்குழு |
| 11. மின்சார சபை |
| 12. காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் |
| 13. காணி சீர்திருத்தல் ஆணைக்குழு |
| 14. பிரதேச செயலகம் |
| 15. கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் |
| 16. வன பாதுகாப்பு திணைக்களம் |
| 17. மேற்கண்டவாறு வேறு நிறுவனங்கள் |

**நான்காவது அட்டவணை**

.................................... பிரதேச சபை

கட்டிட வரைபடம் அனுமதிபெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்

01. விண்ணப்பதாரியின் விபரம்

1.1 விண்ணப்பதாரியின் பெயர்: ...................................................

1.2 மின்னஞ்சல் முகவரி: ...................................................

1.3 தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு இலக்கம்: ...................................................

1.4 தொலை இலக்கம் : நிலையான: ....................................கைப்பேசி ...............
1.5 முகவரி: .............................................................

1.6 வேறு விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவர்களது விபரம்:..................................

| பெயர் | மின்னஞ்சல் முகவரி | தே.அ.அ.இல. | நிலையான தொலை பேசி இலக்கம் | கைப்பேசி இலக்கம் | முகவரி |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

1.7 விண்ணப்பதாரர் நிறுவனம் அல்லது வர்த்தக நிறுவனமாயின் அதன் பதிவு இலக்கம்: .................................
( இது தொடர்பான வர்த்தக பதிவுச் சான்றிதழ் பிரதி இணைக்கவும்)

02. உத்தேச அபிவிருத்தி நடவடிக்கைக்கான சுருக்கமான விபரம்:

2.1 நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள கட்டிடத்தின் பாவனை

| | | |
|---|---|---|
| 1. புது நிர்மாணம் | 2. திருத்தியமைத்தல் | 3. வதிவிட வீடு |
| 4. வர்த்தக தேவைக்கான கட்டிடம் | 5. தொழிற்சாலை தேவைக்கான கட்டிடம் | 6. வேறு அபிவிருத்தி நடவடிக்கைக்கான கட்டிடம் |

மேற்குறித்த 6 இன் கீழ் அமையும் வேறு அபிவிருத்தி நடவடிக்கைக்கான கட்டிடம் எனில் அதன் தன்மை:
.......................................................................................................................................................................................................

2.2. உத்தேச அபிவிருத்தி நடவடிக்கைக்கான ஏற்கனவே அனுமதி பெறப்பட்ட கட்டிட வரைபடம் இருப்பின் அதன் இலக்கம்
..........................................................................................................................................................

2.3 நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள கட்டிடத்தில் ஒரு முறைக்கு பாவனைக்கு உட்படுத்தக்கூடியவர்களின் எண்ணிக்கை
...................................................................................................................................................................................................

03. உத்தேச கட்டிட வரைபடத்தின்

3.1 முகவரி:...................................................
3.2 வரிப்பண இலக்கம் இருக்குமாயின் .......................................................
( அண்மித்த வருடத்தின் வரிப்பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கவும்)

3.3 அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவு:.....................................................
3.4 கட்டிட வரைபடத்தினது நிலத்தின் உரிமை:

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | குத்தகை | அன்பளிப்பு | வேறு |

( வேறு என்றால் உரித்து பெற்றுக்கொண்ட விதத்தை குறிப்பிடவும்)

3.5 நிர்மாணத்திற்கான காணி வரைபடம் பிரதேச சபை தவிசாளரினால் அனுமதி பெற்றுக் கொடுத்ததற்கான தொடர் இலக்கமும் திகதியும்:..........................................................................................
( தவிசாளரினால் அனுமதி பெற்றுக் கொண்ட நிலஅளவையாளர் வரைபடத்திற் பிரதி இணைக்கவும்)
விண்ணப்பதாரார் அனுமதி பெற்றுக்கொள்வதற்கு உத்தேசித்துள்ள காணியின் உரிமையாளரா இல்லையா என்ற விபரம்:
........................................................................................................................................................................................................

04. விண்ணப்பதாரர் காணியின் உரிமையாளர் அல்லாதுவிடின் உரிமையாளர் விபரம்:
4.1 காணி உரிமையாளரின் முழுப்பெயர்:..................................................

4.2. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................( பிரதியை இணைக்கவும்)
4.3 தொலைபேசி இலக்கம் நிலையான:.................................... கைபேசி:.....................................
4.4 நிரந்தர முகவரி:..................................................................................................................
4.5 மின் அஞ்சல் முகவரி:.........................................................................................................
4.6 பெக்ஸ் இலக்கம் : ...............................................................................................................
4.7 இதன் பகுதியாக உரிமையாளரின் அறிக்கை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்

05 . நிர்மாண வேலைக்காக உத்தேசித்துள்ள மனையிடத்திற்கு உட்புறம் வழி விபரம்:
5.1 உத்தேச அபிவிருத்தி இட வரைபடம் ( பிரதான நகரம், சந்தி, பிரதான பாதையிலிருந்து உத்தேச காணிக்கு உட்புகும் வழி குறிப்பிடத்தக்க அடையாளங்கள், அடுத்த காணியின் விபரம் அடங்கிய குறிப்பு போன்ற விபரங்கள் இணைக்கவும்).
5.2 பிரதான பாதை/புகு வழி உரித்து- பொது /தனியார்
5.3 பிரதான பாதை/புகு வழியின் அகலம் /மீற்றர்).........................................................................

06. உத்தேச கட்டிடத்திலிருந்து எல்லைக்கான தூரம்:

| எல்லை | தூரம் |
|---|---|
| 1. வீதி எல்லை அல்லது வீதிக்கோடு | |
| 2. பின்பக்க எல்லை | |
| 3. இடது பக்க எல்லை | |
| 4. வலது பக்க எல்லை | |
| 5. ஆறு, கால்வாய், ஓடை, வாவி, ஒதுக்கு | |
| 6. வேறு ( குறிப்பிடவும்) | |

07. உத்தேச அபிவிருத்தி விபரம்:
7.1 உத்தேச கட்டிடத்தின் மாடிகளின் ......................................
7.2 கட்டிடத்தின் மொத்த நிலப்பரப்பு .......................................
7.3 ஒவ்வொரு மாடிக்குமான பரப்பளவு....................................

| மாடி | உத்தேச பரப்பளவு (சதுர மீற்றர்) | மாற்றமேதும் இருப்பின் உள்ள கட்டிடங்களுக்கான அளவு ( சதுர மீற்றர்) |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| மொத்த பரப்பளவு ( சதுர மீற்றர்) | | |

7.4 கட்டிடத்திற்கு உட்படும் நிலப்பரப்பு அனுமதிபெறப்பட்ட வரைபட பரப்பளவின் விகிதாசாரம்
7.5 நிலப்பரப்பு விகிதாசாரமானது ( சகல மாடியினதும் மொத்த பரப்பளவானது [( வாகனங்கள் நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட அளவு தவிர்த்து ) காணியின் அளவு வீதிக்கோட்டு அறிக்கையில் காட்டப்படும் பகுதி தவிர்த்து)] .........................................
7.6 உத்தேச நிலத்தை மட்டமாக்குவதற்கு நிரப்புவதற்கு நோக்கமிருப்பின் அதற்கான ஆலோசனை காணப்படும் கட்டிடங்கள், பாதை மற்றும் வடிகால் அமைப்பு கொண்ட வரைபடத்தை சமர்ப்பிக்கவும்.
7.7 ஒவ்வொரு மாடியிலும் நிலப்பாவனை தொடர்பான நில அளவு அறிக்கை சமர்ப்பிக்கவும்.
7.8 உத்தேச அபிவிருத்திக்கான வரபடம் வரைபடத்தை இணைக்கவும் ...................................................
7.9 உத்தேச அபிவிருத்திக்கான முதலீட்டின் பெறுமதி ( ரூபா) ...................................................
7.10 குளிர்பதவி வகை ( இருப்பின்) மத்தியமான /பிரிக்கப்பட்ட/தேவையில்லை ...................................................
7.11 நிர்மாணத்திற்கு தேவையான மூலப்பண்டங்கள் விபரம் :
7.11.1 சுவர்
7.11.2 கூரை/கூரைகள்

7.11.3 நிலம்/நிலங்கள்
7.11.4 மேல்மாடி தட்டு (ஸ்லெப்)
7.11.5 அத்திவாரம்

08. அபிவிருத்தியுடன் தொடர்புடைய வேறு விபரங்கள்:

8.1 வாகனங்கள் தரிப்பிடம் மற்றும் போக்குவரத்து தொடர்பான ஈடுபாடு

8.1.1. வரைபடத்தின் வாகன தரிப்பிடம் காட்டப்பட்டுள்ளதா? ஆம்/இல்லை
8.1.2 ஆம் என்றால் தரிப்பிட எண்ணிக்கை
8.1.3 தரித்து வைக்கப்படக்கூடிய வாகன எண்ணிக்கை

8.2 தன்னியலான வதிவிட அபிவிருத்திக்கான விபரங்கள்:

8.2.1. தற்போது காணப்படும் அலகுகளின் எண்ணிக்கை ( இருப்பின்)...............................................
8.2.2 நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள அலகுகளின் எண்ணிக்கை.................................................
8.2.3 மொத்த அலகுகளின் எண்ணிக்கை
8.2.4 வீட்டு அலகுகள் எண்கள் இடப்பட்டு வெவ்வேறு நிறத்தில் காட்டப்பட்டுள்ளதா? ஆம்/இல்லை

8.3 மூன்று மாடிகளுக்கு மேலான கட்டிடமென்றால் மின்தூக்கி வசதி உண்டா? ஆம்/இல்லை
8.4 மின்பிறப்பி இயந்திரம் மூலம் வசதி வழங்கப்பட்டுள்ளதா? ஆம்/இல்லை

09. வேறு நடவடிக்கைகள்
9.1 மேற்பரப்ப நீர் வடிந்தோடுதற்கான நடவடிக்கைகள் ,-..............................................................
9.2 சாக்கடை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்.-.............................................................
9.3 அசுத்த நீர் அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்.-..........................................................
9.4 திண்மக்கழிவுகள் அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்.-................................................
9.5 பொதுமக்கள் தொடர்பான நலன்கள் என்ற வகையில் வலம் குறைந்தவர்கள் நலன் கருதி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதா? இலக்கம் 1467, 2006.10.07 ஆந் திகதி கொண்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப) ஆம்/இல்லை

10. விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கும்போது அனுமதி வேண்டிநிற்கும் கட்டிடம் தொடர்பாக தீர்வுச் சான்றிதழ் பெற்றுக்கொண்டிருப்பின் அது தொடர்பான விபரம்.-

| சான்றிதழின் பெயர் | பிறப்பித்த அதிகாரம் பெற்றவர் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

சகல சான்றிதழ்களினதும் பிரதி இணைக்கப்பட வேண்டும்

11. விண்ணப்பப்படிவத்திற்கான கட்டணம்

11.1 கட்டணம் செலுத்திய திகதி:...............................................................................
11.2 தொகை ( ரூபா):...................................................................................................
11.3 செலுத்திய விதம் : பணம்/காசோலை
( பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமாகும் என்று இத்தால் குறிப்பிட்டு உறுதிசெய்கின்றேன். இந்த விண்ணப்பப்படிவத்துடன் அத்துடன் தொடர்புடைய ஆவணம் சட்டரீதியான தகுதி கொண்ட திட்டமிடல் வல்லுனர்- நகர

நிர்மாண வல்லுனர் சிவில் பொறியியலாளரினால் உறுதி செய்யப்பட்ட நிர்மாண கட்டிடத்திற்கான முன்பக்கத் தோற்றம் பக்கத் தோற்றம் மற்றும் அமைவு காட்டப்படும் விதத்தில் வரைபடத்தின் மூன்று பிரதிகள் சமர்ப்பிக்கப்படுகின்றது என்பதை அறிவித்துக் கொள்கின்றேன்.

.............................                                                                 .....................................................

திகதி                                                                 விண்ணப்பதாரரின் கையொப்பம்

**விண்ணப்பதாரரின் அறிக்கை**

விண்ணப்பதாரர் உத்தேச நிர்மாணத்திற்கான காணி உரிமையாளர் அல்லாது விடின் இந்த அறிக்கையை நிர்மாணத்திற்கான காணி உரிமையாளரினால் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

01. விண்ணப்பதாரரின் மற்றும் உத்தேச அபிவிருத்தியின் விபரம்.-

1.1 விண்ணப்பதாரியின் பெயர்:............................................................
1.2 முகவரி:..........................................................................................
1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :.............................................
1.4 தொலைபேசி இலக்கம் : கைப்பேசி...........................நிலையான.............................
1.5 உத்தேச நிர்மாணத்தின் தன்மை: ..................................................
1.6 நிர்மாணத்திற்காக உத்தேசித்துள்ள காணி முகவரி: ....................
1.7 வரிப்பண இலக்கம் ( இருக்குமாயின் ) :...........................................

02. மேலே இலக்கம் 01 இன் கீழ் விபரிக்கப்படும் நிர்மாணம் செய்வதற்கு உத்தேசித்துள்ள கட்டிடம் தொடர்பாக .......................... நில அளவையாளரினால் வரையப்பட்ட நிலஅளவையாளர் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறான நிர்மாண வேலை மற்றும் சகல விதமான அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கும் மற்றும் அது தொடர்பாக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்க வேண்டிய சகல விதமான ஆவணங்களுக்கு எனக்கு/எமக்கு பதிலாக கையொப்பமிட்டு சமர்ப்பிப்பதற்கும் அது தொடர்பான சகலவி தமான அனுமதிகளையும் அது தொடர்பான சட்டரீதியான அதிகாரத்தின் மூலம் பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கும் மேலே முதலாம் பந்தியில் விண்ணப்பதாரியாக பெயர் குறிக்கப்பட்டுள்ள ................................................................................................ என்பவர்களுக்கு இத்தால் அதிகாரம் சாட்டப்படுவதாக அறிவித்துக்கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

20.......வருடம் .....................மாதம்................ ஆந் திகதி

| பெயர் | கையொப்பம் |
|---|---|
| 1................................................ | ......................................... |
| 2................................................ | ......................................... |
| 3................................................ | ......................................... |
| 4................................................ | ......................................... |
| 5................................................ | ......................................... |

EOG 01- 0113

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.